ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

ஏழாந் தொகுதி.

பத்திராதிபன்:— பண்டித. அரங்கராமாநுஜன்.

மதுரை,

ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

சுக்கில—பிரமோதூத.

1930—1931.

ஸ்ரீ:

ஏழாம் தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அர்ச்சாவதார வைபவம்:-	ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி	23
அம்மையநாயக்கனூர் ஸ்ரீ நரசிங்கப்பெருமாள்:-	ஸ்ரீ. உ. வே. பெரியநம்பி R. சுந்தரராஜய்யங்கார்	68
அத்யவஸாயத்தின் பெருமை:-	ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி.	162, 189, 217, 261, 295
அன்னதோஷம்:-	ப. அ.	204
அரக்கராசுரர்	,, ...	233
ஆசிரிதபாரதந்த்ரயம்:- ...	,, ...	15
ஆசார்யாபிமானம்:-	ஸ்ரீமாந் இராகவராமாநுஜதாஸர்.	197
ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்:-	ப. அ.	97, 143, 177, 214, 244, 275
உபநிடதக்கதை:- ...	,, ...	304, 115
எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்:-	ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்யஸ்வாமி.	169
ஒரு மறுப்பு:-	ஸ்ரீ. உ. வே. செ. இராமையங்கார ஸ்வாமி.	81
ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்:-	ப்ரஹ்மஸ்ரீ வி. எஸ். ராமசாமி சாஸ்திரிகள்	19, 43, 58
கம்பர் கடவுள் வாழ்த்து:-	ப. அ.	25, 60, 73, 121, 249
ஸாது கோஷ்டி:-	ப. அ.	153
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மஹா சங்கம்:- ...	,, ...	248

திருக்குறள் ஆராய்ச்சி ... ... ,, ... 36

திவாகரத்தின் ஏழாவதாண்டு ... ... ,, ... 1

நம்பிள்ளை வைபவம்:- ஸ்ரீ. உ. வே.
ரெ. இராமையங்கார்ஸ்வாமி 12, 49, 132, 157

நன்கொடை:- ... ... ப. அ. 96

நாரதர் உபதேசம்:- ... ... ,, ... 281

பகவன் மாயை:- ... ... ,, ... 35

பட்டினங்காப்பு:- ... ... ப. அ. 225

பன்மணித்திரள்:- ... ... ,, ... 6

ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீரங்கராசாஸ்கர்:- 92

பாகவதாபசாரம்:- ஸ்ரீமாந்,
இராகவராமாநுஜதாஸர் 139, 173, 239, 269, 286

ப்ரபந்தபரித்ராணம்:- 309

மதிப்புரை:- ... ,, ... 120, 280, 307, 308

ஸ்ரீவைஷ்ணவ நிராதார பாகவத சரமகைங்கர்ய சங்கம்:- ப. அ. 71

ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயில் விஷயமான உண்மையுரை } ஸ்ரீ. உ. வே. ரெ. அப்புவையங்கார் ஸ்வாமி. 107

தர்ப்பாராயணம் ஆரம்பிக்கும் காலம்:- ஸ்ரீ. உ. வே.
ரெ. அப்புவையங்கார் ஸ்வாமி. பக்கம் 1 முதல் 17

ஏழாந்தொகுதியில் வெளிவந்த புஸ்தகம்:- ஸ்ரீராமாநுஜார்ய
திவ்ய சரிதை சருக்கம்:- பக்கம் 1 முதல் 18.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. சுக்கிலஹு தைமீ பகுதி க.
Vol 7. *January & February 1930.* No. 1.

திவாகரத்தின் ஏழாவதாண்டு.

பாருருவில்நீரேரிகால்விசும்புமாகிப்
பல்வேறுசமயமுமாய்ப்பரந்துநின்ற
ஏருருவில்மூவருமேயெனநின்ற
இமையவர்தந்திருவுருவேறெண்ணும்போது
ஓருருவம்பொன்னுருவமொன்றுசெந்தீ
ஒன்றுமாகடலுருவமொத்துநின்ற
மூவுருவுங்கண்டபோதொன்றுஞ்சோதி
முகிலுருவமெம்மடிகளுருவந்தானே.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரனது பரமகிருபையால் நமது திவாகரத்தின் ஆறுவதாண்டு இனிது நிறைவுற்று ஏழாவதாண்டு தொடங்கப்பெறுகிறது. உலகத்தில் மக்களாய்ப் பிறந்துள்ள நாமெல்லாம் பிறந்திறந்துழல்கின்ற பெருந்துன்பத்தைக் கடந்து நித்யானந்தவாழ்வை யடையவேண்டுமானால் நமக்குப் பிர்ம்மஜ்ஞானம் உண்டாகவேண்டும். பிர்ம்மம் இன்னதென்று தெரியாத நிலைமையில் பிர்ம்ம விஷயமான ஜ்ஞானமுண்டாவதென்பதியலாது. ஆனால் அந்தப் பிர்ம்மத்தை யறிவதற்குப் பிணங்குஞ்சமயங்களாகிய மார்க்கங்கள் பலவுண்டு. அவற்றிற்புகுந்து ஆராயலாமென்று கருதினாலோ சிலவாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினமாகிய நம்மனோருக்கரிதாயிருக்கும். பின்னை யெவ்வகையானறிவதென்னின்; தத்வத்தையுள்ளபடி

யறிந்து அறிந்தவாறுபதேசிக்கவல்ல பிர்ம்மஜ்ஞாநிகளாகிய பெரியார் எந்த மார்க்கத்தைப்பற்றி நின்று உண்மைநிலை யறிந்தவர்களோ அந்த மார்க்கத்தின் வழியாகச் சென்று அறிந்துகொள்வது நமக்கெளிதாகும்.

இந்த எளியவழியைப் பற்றுவதற்கு முன்னர் பெரியாரின்னாரென்று தெரிந்து கொள்வதே முதற்கடமையாகும். உலகத்திற் பிறந்த நாட்டொடங்கித்தாய்ப்பாலுண்ணாது ஆராவமுதாகிய பரம்பொருளைப்பருகிக்களித்த ப்ரபந்நஜனகூடஸ்தராகிய நம்மாழ்வாரும், காரணப்பொருள் இன்னதென்று ஆராய்ந்து தியானஞ் செய்தற்கு எழுநூறாண்டு பல்சமயங்களிற் புகுந்துபுகுந்தாய்ந்தாய்ந்து தெளிந்த திருமழிசையாழ்வார் முதலானோர்களும் பெரியராவாரென்று சிறிதும் ஐயமின்றித் தெளியலாகும்.

இனி, இவர்கள் பற்றி நின்ற சமயமின்னதென்றாராயுறின். "ஆம்வண்ணமின்னதொன்றென்றறிய வரிய வரியை, ஆம்வண்ணத்தாற் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த" என்றும், "சாக்கியங்கற்றோஞ்சமணங்கற்றோஞ் சங்கரனார், ஆக்கியவாகம நூலாராய்ந்தோம், பாக்கியத்தால் செங்கட்கரியானைச் சேர்ந்தியாம் தீதிலோம், எங்கட்கரிய தொன்றில்" என்றும், "இனியறிந்தேன் ஈசற்கும் நான் முகற்குந் தெய்வம்" என்றும் அருளிய அருளிச்செயல்களால் இவர்கள் ஆய்ந்து தெளிந்து பற்றிப் சமயம் ஹரிஸமயமென்பது வெளியாகிறது.

இந்த ஹரிஸமயத்திற்கு இவர்கள் செய்த தொண்டாவது உலகினர்க்குள்ள அஜ்ஞாந விருளைப்போக்கிச் செங்கண்மாலே பரதேவதையாவானென்ற உண்மையுணர்வைப் பிறப்பித்து அவர்களை நல்வழிப்படுத்தியதேயாம். * இதனால், உலகினர்க்கு நல்லறிவைப்

* பிறரை நல்வழிப்படுத்துவதே எம்பெருமானுக்குச் செய்யும் தொண்டுகளிற் சிறந்ததாம் என்பதை நம்பிள்ளை, ஈட்டில் "இவவொன்றுந் தேவிலே 'திருக்குருகூரதனுள் பரன்றிறமன்றிப் பல்லுலகீர் தெய்வமற்றில்லை பேசுமினே' என்று பொலிந்து நின்றபிரானே சர்வஸ்மாத்பரனென்று இவர் அருளிச்செய்யக்கேட்டு 'கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின்' என்னக் கண்டு ஜகத்தாகத் திருந்தி ஸ்ரீவைஷ்ணவர்களாயிற்று; இவர்தாமவர்கட்கு

பிறப்பித்து அவர்களை எம்பெருமான் தாளடையும்படி செய்வதே அவனுக்குச் செய்யும்தொண்டுகளிற் சிறந்ததாமென்பது பெறப்படுகிறது.

உடையவர் "மாறனடிபணிந்துய்ந்தவ" ராதலால் நம்மாழ்வார் கையாண்ட பிறரை நல்வழிப்படுத்துவதாகிய சிறந்த தொண்டையே தாமுமேற்கொண்டு ஸ்ரீபாஷ்யத்தால் இதர ஸமயங்களைக் களைந்து, திக்விஜயஞ் செய்து எல்லோருக்கும் மெய்யுணர்வைப் பிறப்பித்தார்.

இத்துணையுங் கூறியவாற்றால் பெரியாரின்னாரென்றும், அவர்கள் கடைப்பற்றி நின்ற சமயமின்னதென்றும், அச்சமயத்திற்கு அவர்கள் செய்த தொண்டின்னதென்றும் புலனாயின. இனி நாம் இம்முறைகளைக் கையாளவேண்டு மென்பது முடிவாயிற்றன்றோ! இம்முறைகளை யெல்லாம் நமக்கடிக்கடி ஞாபகப்படுத்துவதற்காகவன்றோ திவாகரம் நிறைமொழி மாந்தரின் உரை பலவற்றையும் தனக்கங்கமாகக் கொண்டு வெளித்தோன்றியது.

இங்ஙனம திவாகரம் ஒழுக்கமுடையாரின் உரைகளைக்கொண்டு விளங்குகின்றதினால் கடுமாற்றற்ற தீக்கதிகளைத் தவிர்த்து நெடுமாற்காளாக்குமென்று சிலர் இதனை ஆதரிக்க முன்வந்தார்கள், இவர்கள் ஆதரவாலன்றோ திவாகரம் நிறைபெற்றிலங்குகிறது. இவர்களது நன்றி எழுமையுமறக்கற்பாலதன்று.

உலகிற் காணப்படும் திவாகரம் உதயாஸ்தமனத்தோடு கூடி புறவிருளகற்றும் பெற்றியது, இது ஹரிஸமயதிவாகரமானதால் உதயாஸ்தமனமின்றி மாந்தரின் அகவிருளகற்றும் பான்மைத்து, இத்தன்மையுடைய இதனை, நம் சமூகத்தினர் எத்துணையோ பலரி-

மங்களாசாஸநம்பண்ணும்படியிறே அவாகன்திருந்தினபடி; 'பொலிக பொலிக' என்று இதுக்கென்ன ஒரு திருவாய்மொழி நேருகிறாரிறே. • ஸர்வேசுவரனவதரித்துத்திருத்தப் பார்த்தவிடத்தும் திருந்தாத சம்சாரத்திலே இவர் திருத்தத திருந்தினபடி; இனி இவருக்குத் ததவ நிர்ணயம் பண்ண வேண்டாதபடி 'இடங்கொள் சமயத்தை யெல்லாமெடுத்துக்களைவன போலே, தடங்கடற் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களே' யாம்படியாயிற்று. இப்படித் திருத்துகையாலே, ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன்' என்கிறார்'' என்றருளிச்செய்ததும் இங்கு ஆராயத்தக்கது.

ருந்தும் அவர்களெல்லாம் ஆதரிக்காதிருக்கிற பெருங்குறையை நினைத்து நினைத்து மனம் வருந்துகிறது. இக்காலத்தில் எவருக்கும் ஓராண்டில் இரண்டு ரூபா கொடுப்பதென்பது ஒரு பெரிய காரியமன்றே.

திவாகரம், தன்னூதியத்தைக் கொண்டு சில மாணுக்கர்களை யாவது ஆதரித்து அவர்கள் மூலமாக நம் ஸம்ப்ரதாயப் பெரும் பொருளைப் பலருக்கும் அளித்துக் களிக்கவேண்டுமென்ற கருத்தோடு விளங்குகிற தென்பதைப் பன்முறையு மறிவித்துள்ளோமன்றே! இதனையாவருமறிந்திருந்தும் உபகரிப்பதற்கு அவர்கள் திருவுள்ளமிடாதிருப்பதை என்னென்போம்.

இங்ஙனம் களிப்பின்மை ஒரு புறமிருக்கினும், 'திவாகரம் நாளிற்கு நாள் நுண்ணிய பல அரிய விஷயங்களாகிய கிரணங்களைப் பரப்பி விளங்குகிறது' என்று பலர் பாராட்டக்கேட்டு மகிழ்ச்சியு முண்டாகிறது.

இக்காலத்தில் சில பத்திரிகைகள் தோன்றி வேதமென்பது ஒருபுரட்டுச் சுவடி யென்றும், இதிஹாஸ புராணுதிகளோ சிலர் பிழைப்புக்காக எழுதி வைத்தவை என்றும், அவற்றுள் முன் பின் முரணுள்ளவை பலவுண்டென்றும் வாய்வந்தபடி பேசிப் பிதற்றத் தலைப்பட்டுள்ளன. இந்திரியத்திற்கு விஷயமாகாத பிர்ம்ம வஸ்துவை யறிதற்குக் கருவியாயிருக்கிற சுருதீதிஹாஸ புராணுதிகளின் கதியிதுவானுல் இவற்ருலறியப்படும் பிர்ம்மத்தின் கதியாதாகுமென்பது சொல்லாமலே யறியலாம். இவ்வாறு இப்பத்திரிகைகள் அதர்மங்களைப் பல்லாயிரம் ஜன சமூகத்திற்குப் போதித்து அவர்களறிவைக் கெடுத்து வருகின்றமையை ஆஸ்திகாபிமானிகளா யுள்ளாரனைவரு மறிவர். இந்நிலையில் நமது திவாகரம் போன்ற பத்திரிகைகள் தோன்றி உலகினர்க்கு நன்மார்க்கத்தை உள்ளவாறு போதிப்பிக்க வேண்டுமென்பது அவசியமாகத் தோன்ற வில்லையா?

இது நிற்க; சென்ற ஆருவதாண்டு நிறைவு விழா நாளது சுக்கில-ஸு மார்கழி-மீ 28-உ (11—1—30) உயன்று திருவரங்கம் பெரியகோயில் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி முன் மண்டபத்தில் ஸ்ரீ. உ. வே. வித்வான் பகுகும்பி ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியின்

அக்ராஸனாதிபத்யத்தில் இனிது நடைபெற்றது. அப்பொழுது பத்திரிகையின் அறிக்கைப்பத்திரம் பத்திராதிபரால் வாசிக்கப்பெற்றது. அதன் மேல் அக்ராஸனர் 'தீர்த்த ஸங்க்ரஹம்' என்ற விஷயத்தைக் குறித்துப் பலசான்றுகள் எடுத்தோதி மிகவும் விமரிசையாக ஸபையினர் களிக்குமாறு உபந்யஸித்தார். பின்னரும் அக்ராஸனரே பத்திரிகையின் இயல்பையும், இதையெல்லோரும் ஆதரிக்கக் கடமைப் பட்டவராவாரென்பதையும் எடுத்தோத ஸபை இனிது நிறை வேறியது.

சென்ற ஆண்டு முடிவாகத் திவாகரத்திற்கு ஸம்ரக்ஷகராகச் சேர்ந்தவர் நால்வரும், போஷகராகச் சேர்ந்தவர் இருவரும், ஜீவித சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர் தொண்ணூற்றைவரும் ஆக நூற்றொருவராவர். இவர்கள் மூலமாக இதுவரை வசூலான ரூபா 1977—0—0 இன்னும் இவர்கள் மூலமாக வசூலாகவேண்டிய ரூபா 1126—0—0 பாக்கியுள்ள ஜீவித சந்தாதாரர்கள் விரைவில் கொடுத்துதவுவதோடு மேலும் பல சந்தாதார்களைச் சேர்ப்பித்தாதரிக்க வேண்டுகிறோம்.

நம் சமயத்திற்கு இக்காலத்திற் கேற்றவாறு செய்யத்தக்க இன்றியமையாதன சிலவுள. அவையாவன: பள்ளிச்சிறுரும் பயிலுமாறு ஸம்பரதாயச் சிறு சுவடி எழுதுதல், ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களைத் தெள்ளிய தமிழ் நடையில் எழுதுதல், ஸம்ப்ரதாயத்தில் உத்ஸாகமுண்டாக்குதல், நம் தத்வார்த்தங்களை எளிதிலறியுமாறு செய்தல், பூர்வாசார்யர்களின் ஒழுக்கமுறையை எடுத்துக்காட்டி, அதனுன் உண்மைநெறியைத் தெரிவித்தல், முன்னோர் சென்ற முறை பிறழாது செய்தல், பூரண்பாட்கற்றல், சமரச முறையைத் தெரிவித்தல், வெளிவாரத ஏட்டுச் சுவடிகளை வெளியிடல் முதலியனவாம்.

இத்தொண்டுகளை முறையாகச்செய்வதற்குச் சில அறிஞர்களின் துணைவேண்டியதாயிருக்கிறது. அத்துணைக்கும் துணையாக விருப்பது பொருளாதலாலும், அதன் சகாயம் பெரிதும் குறைவாக விருப்பதாலும் இம்முறைகளைக் கையாளுதற்கியலவில்லை. திவாகரத்திற்குச் சந்தாதார்கள் மிகுதியாகச் சேர்வார்களானல் முன் குறிப்பிடப்

பெற்ற முறைகளை எளிதிற் செய்துவிடலாம். இன்றேல் கைப்பொருளுடையாரின் துணைகொண்டு செய்யவேண்டும். இனி இவ்விரு துணைகளையும் பெறுதற்கு எல்லாம்வல்ல எம்பெருமான் இன்னருள் புரியுமாறு வேண்டுகிறோம்.

சென்ற ஆறுண்டு முடிவாகப் பத்திரிகை பொருப்பாளரும், கார்யநிர்வாஹரும் யாதொரு நிவேதனமும் பெறாது கார்யஞ்செய்து வந்ததினுல் பத்திரிகை இனிது நடைபெற்றது. இவர்கட்கு நிவேதனங்கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தால் இவ்விஷயத்தை வெளியிட்டதாகக் கருதவேண்டா. இவர்கட்குரிய நிவேதனமும் எஞ்சியிருக்குமேல் அதையும் பத்திரிகை நிதியுடன் சேர்த்து விர்த்தி செய்வதற்கு ஹேதுவாயிருக்குமென்ற கருத்தான் வெளியிடலாயிற்று. இந்த நிதியும் பத்திரிகைக்குச் சேராதொழிந்தமைக்குச் சில சந்தாநேயர்கள் சந்தாத்தொகை செலுத்தாதிருந்ததே காரணமாகும். இந்தப் பெருங்குறையையும் ஈண்டு வெளியிடாதிருக்க முடியவில்லை. இனியாவது சந்தாநேயர்கள் இவ்வாறு நஷ்டப்படுத்தாதிருக்க அவர்களைப்பன்முறையும் வேண்டுகிறோம்.

சில உயிர் நண்பர்கள் நம் திதாகரத்திற்கு அநந்யப்ரயோஜனமாகத் தொண்டு புரிந்து வருகிறார்கள். இவ்வாறு செய்கின்ற இவர்கட்கு நம்மால் செய்யத்தக்க கைம்மாறு யாதுளது? எல்லா சந்தாநேயர்களும் இவர்கட்கு நன்றி பாராட்டுவாராக.

ப. அ.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

கடன்ஞாலத்தளிமிக்கான்.

ஸர்வேச்வரன் உபயவிபூதிநாதனுக விளங்குகின்றான். உபய விபூதியாவன: இவ்வுலகமும் பரமபதமும். இவ்வுலகத்திலுள்ளவர்கள் சம்ஸாரபந்தத்தில் கட்டுண்டவர்கள். பரமபதத்திலுள்ளவர்கள் சம்ஸாரபந்தத்தினின்று விடுபட்டவர்களும் இயல்பாகவே சம்ஸார

சம்பந்தமற்றவர்களுமாயிருப்பார்கள். பரமபதத்திலிருப்பவர்கட்கு ஒன்றுமொரு குறைவுமில்லை. இவ்வுலகத்திலுள்ளவர்களே எல்லா வற்றாலும் குறைபாடுடையவர்கள். இக் குறையுடையவர்களை நன்னிலையில் நிறுத்துவதற்கு இவர்களிடத்தில் எம்பெருமான் மிகவும் கிருபையுடையவனாயிருப்பான். தன்னகத்திற் புத்திரனிருந்தாலும் தேசாந்திரஞ் சென்ற புத்திரனிடத்தில் பிதாவின் இருதயம் குடிபுகுவதியல்பன்றோ! இந்த சம்சாரி சேதனர்களிடத்தில் எம்பெருமான் திருவுள்ளம் குடிபுகுவதாலன்றோ அவன் தன்னிச்சையால் இவர்கட்காகப் பலவவதாரமெடுக்கிறான். இனி, இது ஒரு வரலாற்று முகத்தான் விளக்கப்பெறும். அது வருமாறு:—

ஸர்வேச்வரன் தசரதனுக்குத் திருக்குமாரனாக அவதரித்துப் பிதுர்வாக்யபரிபாலனம் என்ற ஒரு வியாஜத்தை முன்னிட்டு இளைய பெருமாளையும், பிராட்டியாரையு மழைத்துக்கொண்டு வனம் செல்லலுற்றான். அப்பொழுது தேவாதிகள், சக்ரவர்த்தித் திருமகன் தேவகார்யத்தைச் செய்து விட்டு விரைவில் தன்னுடைச் சோதிக்கெழுந்தருளச் செய்ய வேண்டுமென்று பிராட்டியார் பிரியுமாறு சூழ்ச்சி செய்தார்கள். அதனால் இராவணாதிராக்ஷஸர்களின் ஸம்ஹாரம் நேர்ந்தது. அதன் பின்னர் இராமபிரான் திருவயோத்திக் கெழுந்தருளிப் பரதாழ்வானுடைய வேண்டுகோளின்படி பட்டாபிஷேகஞ் செய்து கொண்டனர். ஆண்டும் பதினோராயிரங்கழிந்தது. அதன் மேலும் இராமபிரானுக்குத் தன்னுடைச் சோதிக்கெழுந்தருளத்திருவுள்ளமில்லாதிருந்தது. அப்பொழுது யமதருமன் ஆங்கு வந்து சேர்ந்தான்.

அது சமயம் இராமபிரான் இளையபெருமாளை நோக்கி, 'நாம் தருமனோடு சிலரஹஸ்ய விஷயம் பேசப்போகிறோம்; எம்முடைய உத்தரவில்லாமல் எவரையுமுள்ளே விடலாகாது; விடுவையேல் என் முகத்தில் விழிக்கலாகாது; ஜாக்கிரதையாக வாயிலைக்காத்துக்கொள்வாய்' என்று ஆக்ஞாபித்தார். அவ்வாக்ஞையின்படி இளையபெருமாள் வாயிலைக்காத்துக்கொண்டிருந்தார். மண்டபத்துள் தருமனோடு இராமபிரான் எழுந்தருளியிருந்தகாலத்தில் தருமன் வணங்கி நின்று இராமபிரானை நோக்கி, 'தேவரீர் ஸங்கல்பித்துக்கொண்டு

இங்கெழுந்தருளியபடி தேவகார்யம் பூர்த்தியாயிற்றே. ஆண்டும் பலகழிந்தனவே; ஆதலால் இனித்தன்னுடைச்சோதிக்கெழுந்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்தான். இராமபிரானும் அங்ஙனமே செய்கிறோம் என்றனர்.

இஃதிங்ஙனம் நிகழ வாயிலேக்கர்த்துக்கொண்டிருந்த இளைய பெருமாளிடத்தில் துர்வாச மஹரிஷி வந்து சேர்ந்தனர். இளைய பெருமாளும் அவரை வரவேற்றனர். பின்னர் மஹரிஷி இளைய பெருமாளை நோக்கி 'என்னை உள்ளே புக விடு' என்றனர். அதுசமயம் இளையபெருமாள், 'நாம் இந்த மஹரிஷியை விடமாட்டோமென்போமாகில் சாபசக்தியிற் சிறந்தோனாகிய இவன் நம்மோடு இராமபிரானையும் சபித்து விடுவான; உள்ளே புக விடுவோமாகில் இராமபிரான் கட்டளையைக் கடந்தோமாகிறோம்; அந்தோ! இந்த சங்கடத்திற்கென்செய்வது' என்று தனக்குள் ஆய்ந்து, 'இனி நாமொழிந்தாலும் ஒழிவோம்; இராமபிரானுக்கு யாதொரு கெடுதியும் வாராதிருக்க வேண்டும்' என்று தீர்மானித்து மஹரிஷியை உள்ளே புகவிட்டு, என் முகத்தில் விழிக்கலாகாது' என்று கட்டளையிட்ட இராமபிரானது உரையை நினைத்துக்கொண்டு சரயூநதியில் இறங்கிவிட்டனர். அதன் பின்னர் இளையபெருமாளின் பிரிவையறிந்து இராமபிரான் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளினார். எம்பெருமானுக்கு உலகினரிடத்திலுள்ள பேரருளினாலன்றோ இளைய பெருமாளைப் பலாத்காரமாகப்பிரித்து அவனைத்தன்னுடைச்சோதிக்கெழுந்தருளும்படி செய்ய நேர்ந்தது. இது பற்றியே ஆழ்வாரும், "கடன்ஞாலத்தளிமிக்கான்" என்று அருளிச்செய்தார்.

ததிபாண்டன்.

ததிபாண்டன்:—தயிர்க்கலமுடையவன். பிர்ம்மஜ்ஞானத்தால் மோக்ஷமுண்டு என்பதற்கு இவனை உதாரணமாக எடுத்துக்காட்டுவதுண்டு. ஒருநாள் கண்ணபிரான் யசோதை பால் கொடாததற்காகத் தயிர்த்தாழியை உடைத்துருட்டினான். அதுகண்ட யசோதை ஒரு கோலை யெடுத்துக்கொண்டு கண்ணனை யடிக்க ஓடிவந்தாள். அப்பொழுது கண்ணன் அவளுக்ககப்படாதபடி ததிபாண்டன்

மனையிலோடி மறைந்தான். அதுகண்ட ததிபாண்டன் கண்ண னுடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு எனக்கு மோக்ஷங் கொடுக்கவேண்டும்' என்ன, கண்ணன் 'என்னுடைய தாய் என்னை யடிக்கவருகிறாள், என் காலை விட்டுவிடு' என்றனன். ததிபாண்டன் 'நீ எனக்கும், எனக்குவேண்டிய இருபத்தெட்டு மனையிலுள்ளார்க் கும், என்னுடைய தயிர்த்தாழிக்கும் பரமபதங்கொடுக்கவேண்டும், கொடாதொழிவையேல் உன்காலை யொருபொழுதும் விடமாட்டேன் உன்னை யசோதை கையிற் காட்டிக் கொடுப்பேன்' என்றனன். கண்ணன் அவன் வேண்டுகோளின்படி அவனுக்கும், அவன் தயிர்த் தாழிக்கும் மோக்ஷங் கொடுத்தான். இதனை,

சிந்திக்கநெஞ்சில்லைநாவில்லைநாமங்கள்செப்பநின்னை
வந்திக்கமெய்யில்லைவந்திருபோதுமொய்ம்மாமலர்ப்பூம்
பந்தித்தடம்புடைசூழரங்காததிபாண்டனுன்னைச்
சந்தித்தநாள்முத்திபெற்றதென்னோதயிர்த்தாழியுமே.

என்ற திவ்யகவிவாக்காலும் நன்கறியலாம்.

இங்குத் ததிபாண்டனுக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாயிற்றாதலால் இவனுக்கும், இவனுக்குப்பிறகு விஷயமான தயிர்த்தாழிக்கும் மோக்ஷங்கொடுத்தான். கண்ணன் யசோதை யடிக்க வந்ததற்குப் பயந்து ஓடிவந்த நிலைமையில் எவரும் 'இதுஒரு அறியாச் சிறுகுழவி' என்று தானே நினைக்கவேண்டியதாயிருக்கும். இந்தச் சந்தர்ப்பத் தில் 'இக் குழந்தை ஸர்வவல்லமையுடைய பரவஸ்து; ஒருகாரணார்த் தமாக இங்கு வந்தவதரித்துள்ளது; இவ்வஸ்துவுக்கு எல்லாவற்றை யுங் கொடுக்கும் சக்தியுண்டு' என்ற புத்திபிறவாதபோது 'எனக்கு மோக்ஷங்கொடு' என்று கேட்பது அரிதாகுமன்றோ!

மேலும், ததிபாண்டனைக் கண்ணன் புகலிடமாகப்பற்றிய போது அவன் கண்ணனை ரக்ஷகமாகப்பற்றியதற்கு யாத்ருச்சிகமாகத் ததிபாண்டனுக்குண்டாகிய திடமான பிர்ம்மஜ்ஞானமே காரண மாகும். இந்தத் ததிபாண்டனுக்குண்டாகிய ஜ்ஞானம் திடமுடைய தாவென்று பரீக்ஷிப்பதற்காகக் கண்ணன் அவனை நோக்கி 'அப்பா என் காலை விட்டு விடு; என்தாயடிக்க வருகின்றாள்' என்று ஒரு தாய்க்குப் பயந்த குழவிபோலப் பாவித்தான். அப்பொழுதும்

ததிபாண்டனுக்குண்டாகிய உண்மையுணர்வு மாறுபடவில்லை. அது கண்ட கண்ணன். 'நம்மைஇப்பொழுது இவன் ரக்ஷ்யப்பொருளாக நினைக்க வேண்டிய நிலைமையில் ரக்ஷகவஸ்துவாக நினைத்தானே; இவனது உண்மையுணர்விருந்தவாறென்னே!' என்று வியந்தான்.

தசரதச் சக்ரவர்த்தி, பரப்பிர்ம்மத்தையே குழந்தையாகக் கொள்ளும் பாக்யமுடையவர்; பிர்ம்மநிஷ்டரான வசிஷ்டரை ஆசார்யராகக் கொண்டவர்; 'இராமன் பரப்பிர்மம்' என்று விசுவாமித்திரர் அறிவிக்கக் கேட்டவர்; இத்துணைப்பெருமையுடையவராயிருந்தும் இராமபிரான் வனவாசம் செல்லலுற்றபோது ஆற்றுத்துயருற்று,

"பொருந்தார்கைவேல்நுதிபோல்
பரல்பாயமெல்லடிகள்குருதிசோர
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப
வெம்பசிநோய்கூறவின்று
பெரும்பாவியேன்மகனே போகின்றாய்
கேகயர்கோன்மகளாய்ப்பெற்ற
அரும்பாவிசொற்கேட்டஅருவினையேன்
என்செய்கேன் அந்தோயானே."

என்று இராமபிரானைப் புத்திரனாகக் கருதி உயிர் துறந்தாராதலால் இவருக்கு மோக்ஷங்கிடைத்திலது. வசிஷ்ட விசுவாமித்திரர்களின் ஆப்தவசனத்தாலும், தாடகா தாடகேயர்களின் வதையைக்கேட்டதனாலுண்டாகிய யூகத்தாலும், பரசுராமபங்கத்தைக் கண்ட பிரத்யக்ஷத்தாலும், தசரதனுக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாவதற்கிடமுண்டு. இங்குக் கண்ணன் சிறுகுழவியாயிருந்ததினாலும், பயந்து வந்து மறைந்ததினாலும், புகலற்றவன்போல் பாவித்ததினாலும் பிர்ம்மஜ்ஞான முண்டாகாதிருப்பதற்கிடமுண்டு. இங்ஙனமிருக்கத் ததிபாண்டனுக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாகித் தசரதருக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாகாதிருந்ததை ஆராயுமிடத்து, எத்துணை மதிப்புடையாராயினும் ஸர்வேசுவரன் அநுக்ரஹமுண்டாகாதிருக்குமேல் அவருக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாகாதென்பதும், எவ்வளவு இழிவுடையாராயினும் அவனுடைய அநுக்ரஹமுண்டாகுமேல் அவருக்குப் பிர்ம்மஜ்ஞானமுண்டாகுமென்பதும் விளங்குகின்றன.

எல்லா ஜீவர்களும் மெழுகிலொட்டிய பொன்போல மூலப்பிரகிருதியில் ஒருமாய்க்கிடந்தகாலத்தில் ஸர்வேசுவரன் அந்த ஜீவர்களின் கர்மங்கட்கேற்றவாறு பல்வேறு வகையான சரீரங்களைக் கொடுத்து அந்த ஜீவர்களிடத்தில் அநுப்ரவேசித்து நிற்கின்றான். இதனால் உலகில் பெயரிட்டு வழங்கப்படுகிற எல்லாவஸ்துக்களிலும் ஒவ்வொரு ஜீவாதிஷ்டான முண்டென்று கொள்ளக் கிடக்கிறது இந்த ரஹஸ்யார்த்தம், ததிபாண்டன் தாழிக்குக் கண்ணன் மோக்ஷங்கொடுத்தானென்பதில் வெளியாகிறது. தாழிக்கு மோக்ஷங் கொடுத்தலாவது தாழியிலுள்ள உயிர்க்கு மோக்ஷங்கொடுப்பதாம். ஆனால் அசேதனப்பொருள் பலவற்றில் உயிருண்டென்று சொல்வதற்கியலாதிருத்தல், அங்குள்ள உயிர் மிக்க பாபத்தால் ஜ்ஞாந விகாஸஞ் சிறிதுமில்லாதிருக்கப் பெறுதலாலென்பர். *

மேலும், இந்த விருத்தாந்தத்தில் ததிபாண்டன் ஸம்பந்தமுடைய தாழிக்கும் முத்தி ஸித்தித்ததென்று தெளிவாகிறதினால் பிரம்மஜ்ஞாநமில்லாதிருந்தாலும் அந்தஜ்ஞாநமுற்றிலுமுடையாரின் சம்பந்தத்தால் மோக்ஷ ஸித்தியுண்டென்பதறியலாயிற்று.

---

* பாபமே மிகுந்திருக்குமேல் அந்த ஜீவர்கட்கு மண் கல் முதலிய சரீரங்களும், சிறிது பாபங் குறைந்துள்ள ஜீவர்கட்கு மரம், செடி, பாம்பு, பக்ஷி, மிருக முதலிய சரீரங்களும், புண்ணியபாபம் விரவப்பெற்ற ஜீவர்கட்கு மனுஷ்ய சரீரங்களும், சிறிது புண்ணிய மிகுந்த ஜீவர்கட்கு நாக கந்தர்வ யக்ஷதேவ சரீரங்களும், மேலும் புண்ணிய மிகுந்த ஜீவர்கட்கு இந்திர, பிரஜாபதி பிர்ம்ம சரீரங்களும் உண்டாகின்றன. “தயா திரோஹிதத்வாச்ச சக்தி: க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞிதா, ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந வர்த்ததே” “அப்ராணிமத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோதிகா” “தயாதிரோஹிதத்வாச்ச சக்தி: க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞிதா, ஸர்வ பூதேஷு பூபால தாரதம்யேந வர்த்ததே” “அப்ராணிமத்ஸு ஸ்வல்பாஸா ஸ்தாவரேஷு ததோதிகா” என்ற ப்ரமாணமும் இதனை வலியுறுத்தும்.

ஸ்ரீ:

நம்பிள்ளை வைபவம்.

சிந்தின் வார்த்தை திறை கோண்டது.

இப்படி நிறைவுற்ற ஸ்ரீவைஷ்ணவத்திருவுடன் பிள்ளை தர்சனம் நிர்வஹித்து வாழ்வாராயினர். அப்பொழுது நடுவில்திருவீதிப் பிள்ளை பட்டர் என்று ஒரு பெரியாரிருந்தனர். அவர் கூரத்தாழ்வானுடைய திருப்பேரனாராவர். அவரது பெரும் புலமையாலும் குலப்பெருமையாலும் ராஜஸ்தானங்களிலும் அவருக்குப்பெருமதிப்புண்டு. அவர் பிள்ளையினது ஞான பக்தி வைராக்யங்களையும் பாகவத ஸமர்த்தியையும் உலகம் மகிழ்ந்து மேற்கொள்ளுதலையும் சிஷ்ய சம்பத்தையுங் கண்டு பொறாது கடுகடுவென்று முனிந்து வருவதாயினர். † வித்துவக்காய்ச்சலென்பதும் வித்வான்களுக்கு இயல்பாயமைந்திருத்தல் எவரும் அறிந்ததே.

அவர் ஒருநாள் § வேத்தவைக்கு எழுந்தருளும்போது வழியிலே பின்பழகிய பெருமாள் ஜீயரைக்கண்டு ஜீயா! நாம் ராஜகோஷ்டிக்குப் போகிறோம் கூடவாரீர்! என்றழைத்தனர். அதுகேட்ட ஜீயரும் இவர் நம் பரமாசார்யர் ¶ வழித்தோன்றலன்றோ! வென்று அவ்வாறே உடன் செல்ல இருவரும் அரசவை அணுகினர். அரசனும் நுண்ணிய வறிவினன்; நூற்பலகற்ற திண்ணிய புலமையன்; % நுணங்கிய கேள்வியன்; * வணங்கியவாயினன்; ஆகையால் பட்டரை யெதிர்கொண்டு வெகுமானம் பண்ணி ஆசனத்தில் எழுந்தருளச்செய்து தெண்டனிட்டுப் † பேரோலக்கமாக இருந்துகொண்டு

† வித்துவக்காய்ச்சல் புலமையால் வந்த அழுக்காறு (பொறாமை.)

§ வேத்தவை—இராஜஸபை

¶ வழித்தோன்றல்—வம்சத்தில்தோன்றியவர்.

% நுணங்கியகேள்வி—நுண்ணிய நூற்கேள்வி.

* வணங்கியவாயினன்—பணிந்தமொழியினன்.

† பேரோலக்கம்—பெரியசபை.

அவரது புலமையைச் சோதிப்பான்கருதிப் பின்வருமாறு பணிவுடன் வினவலாயினன்.

பட்டரே! *"ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று தமது பரத்வம் தோன்றாமல் நடையாடுகின்ற பெருமாள் ஜடாயு பக்கல் † "கச்சலோகாநநுத்தமாந்" என்று மோக்ஷமருளிய படி எங்ஙனம் என்று வினவினன். பட்டர் அதற்கு விடையருளிச் செய்ததற்குச் சிறிது விசாரிக்கவேண்டியிருந்தது. அவ்வளவில் அரசனும் தன காரியங்களிற் கருத்தைச் செலுத்திப் பராக்காயினன். அப்பொழுது பட்டர் அருகிருந்த ஜீயரை நோக்கி ஜீயா! ⚜ 'பெரியவுடையாருக்குப் பெருமாள் மோக்ஷமருளியதைத் திருக்கலிகன்றி தாஸர் எப்படி நிர்வஹிப்பர்' என்று கேட்டருளினர். அதற்கு ஜீயரும் "ஸத்யேந லோகாந்ஜயதி" என்கிற சுலோகம் கொண்டு நிர்வஹித்தருளுவர் என்றருளிச் செய்தனர். அதுகேட்ட பட்டரும் ஆமோவென்று அதனைத் திருவுள்ளத்தில் ஆராய்ந்து ஒக்குமென்றிருந்தனர். அவ்வளவில் அரசனும் பட்டர் திருமுகமண்டலத்தை நோக்கித் திரும்பி, பட்டரே! நம் கேள்விக்கு விடையருளிச் செய்திரில்லையே என்றனன். பட்டரும் நீர் பராக்காயிருக்கும்பொழுது நாம் சொல்லலாவதொரு அர்த்த முண்டோ? அமைதியுடன் கேளீ

---

* இது ஸ்ரீராமாயணத்தில் இராவணவதையின் பின்பு தேவர்கள் பெருமாளைநோக்கி அவரது பரத்வநிலை தோன்றப் பலவாறு புகழ்ந்தபொழுது அவர்களை நோக்கிப் பெருமானருளிச்செய்தது.

. ஆத்மாநம்—என்னை, மாநுஷம்—மனிதனாகவும், தசரதாத்மஜம்—தசரதன் மகனாகவும், ராமம்—இராமனாகவும், மந்யே—கருதுகின்றேன்; எ-று.

† 𑌯𑌾 𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑌶𑍀𑌲𑌾𑌨𑌾𑌂 𑌆𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑍇𑌶𑍍𑌚 𑌯𑌾 𑌗𑌤𑌿𑌃 ।
○ 𑌅𑌪𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂 𑌯𑌾 𑌚 𑌯𑌾 𑌚 𑌭𑍂𑌮𑌿𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑌾𑌂 ॥
𑌮𑌯𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑍋 𑌗𑌚𑍍𑌛 𑌲𑍋𑌕𑌾𑌨𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍

இ-ள். யாகஞ்செய்த்வர்களுக்கும், அக்நிஹோத்ரம் செய்தவர்களுக்கும், பூமிதானம்செய்தவர்களுக்கும், முக்தர்களுக்கும் எந்தலோகங்கள் உரியனவோ அந்த உத்தமமான வுலகங்களைச் சென்று சேர்வீர். (எ-று)

⚜ பெரியவுடையார்—ஜடாயு.

றென்று பின்வருமாறருளிச்செய்தனர். § "ஸத்யேநலோகாந்ஜயதி தீநாந்தாநேநராகவ:, குருந்ஶிஷ்ருஷயா வீரோதநுஷாயுதி ஶாஸ்த்ரவாந்" என்ற ச்லோகத்தை யருளிச்செய்தனர்.

அதனை அரசன் கேட்டு மிகவும் களிப்புற்று தேவரீர் அருளிச் செய்தது ஒக்குமென்றுமுடிதுளக்கிப் பலவாறுபுகழ்ந்துவிலையுயர்ந்த ஆடைகளையும் ஒளிமிக்க அணிகலன்களையும் கொடுத்து வெகுமதி செய்து தான் நிருத்தரனாய் (வேறுரையின்றி)த் திருவடிகளிலே வீழ்ந்து தெண்டனிட்டுக் கோயிலேற வெழுந்தருள்க என்று உப சரித்தனுப்பினன். பட்டரும் அரசன் அளித்த ஆடையணி முதலிய வற்றை ஏற்றருளி அங்கு நின்றும் புறப்பட்டு ஜீயர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு 'ஜீயரே! என்னையும் இப்பொருள்களையும் பிள்ளை திருவடிகளிலே கொண்டுபோய்க் காட்டிக்கொடீர்' என்று அளவு கடந்தெழுந்த பேரன்புடன் மிகவும் வேண்டிக்கொண்டனர். ஜீயரும் அவ்வாறே கொண்டுபோய் பிள்ளை திருவடிகளிலே காட்டிக்கொடுத் தனர். பிள்ளையும் தம்பரமாசார்யர் வழியினரான நடுவில்திரு வீதிப்பிள்ளையை அடிபணிந்து மிகவுமாதரித்து இஃதேதென்று கேட்டருளினர். அப்பொழுது பட்டரும் பிள்ளை திருமுகமண்டல த்தை நோக்கி, 'தேவரீருடைய திவ்யஸந்நிதியில் பதினாயிரங்கோடி யில் ஒன்று பெற்ற பொருள்கள் இவை; அடியேனையும் இப்பொருள் களையும் ஏற்றருளவேண்டும்' என்று வேண்டினர். ஆவதென்? கூரத் தாழ்வான் திருப்பேரனாரான நீர் இப்படிச்செய்யக்கூடாதென்றனர். அதுகேட்ட பட்டர் நித்ய சம்சாரியாகிய அரசன் தேவரீர் திருவாய் மொழிகளிலே சிந்தின சொல்லுக்குத் தோற்றுக்கொடுத்த தனமிது; ஆனபின் கூரத்தாழ்வான் குடற்றுடக்கிற் பிறந்த வடியேன் அப் பெருமைக்குத் தக்கவாறு தேவரீருக்குச் சமர்ப்பிக்கலாவது ஒன்ற மில்லை; ஆயினும் அண்டையகத்தேயிருந்து இத்தனை நாள்ம் தேவரீ

§ ஸத்யேந லோகாஞ்ஜயதி தீநாந் தாநேந ராகவ: ।
ஶுருஞ்ஶுஶ்ரூஷயா வீரோ தநுஷா யுதி ஶாத்ரவாந் ॥

இ-ள். வீரனுகிய இராகவன் உலகங்களை சத்தியத்தினுலும், எளியவர் களைக் கொடையினுலும், குருமார்களைப் பணிவிடைகளாலும், சத்ருக்களைப் போரில் வில்லினுலும் வெல்லுகிறன்; எ-று.

ரது திருவடிகளையடையப்பெறாது இழந்திருந்தேன்; அதன்றியும் தேவரீர் வைபவங்களைக் கண்டு அபசாரப்பட்டு அழுக்காறு செய்து திரிந்தேன்; இவ்வாத்மாவைத் தேவரீருக்குச் சமர்ப்பிக்கை யல்லது அடியேனுக்கு வேறொரு கைம்முதலுமில்லை; ஆதலால் அடியேனை அவசியம் மறாது ஏற்றருள வேண்டுமென்று கண்ணுங் கண்ணீரு மாய்ப் பிள்ளை திருவடிகளிலே வீழ்ந்து ஸேவித்துக் கிடந்தனர். அதுகண்டு பிள்ளையும் வாரியெடுத் தணைத்துக்கொண்டு மிகவும் கடாக்ஷித்தருளித் தம் திருவுள்ளத்திலே தேங்கிக்கிடக்கிற அர்த்த விசேஷங்களெல்லாவற்றையும் அவர்க்கு ஈந்தருள (ப்ரஸாதித்தருள) அவரும் செயல்முற்றியவராய்ப் பிள்ளை ஸந்நிதியை கணமும் பிரியாமல் எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டு களிப்புடன் வாழ்ந்தருள் வாராயினர். இப்படிப்பட்ட பிள்ளைவைபவத்தைக்கண்டு ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும்,

"இந்திரன்வார்த்தையும்நான்முகன்வார்த்தையுமீசனொடு
கந்தன்சொல்வார்த்தையுங்கற்பவரார்இந்தக்காசினிக்கே
நந்தினம்முத்தெறிநம்பூர்வரதர்தம்மாளிகையிற்
சிந்தினவார்த்தைகோண்டேயிந்தநாடுநிறைகோள்வரே"

என்று கொண்டாடுவாராயினர்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

தொடரும்.

ஸ்ரீ:

ஆசிரிதபாரதந்த்ர்யம்.

ஆசிரிதபாரதந்த்ர்யமாவது:—தன்னை யடைந்த அடியவர்கள் வசப்பட்டிருக்கை. இது ஸர்வேசுவரனிடத்திலுள்ள உத்தம குணங்களிலொன்று. அடியவர்கள் வசப்பட்டிருத்தலாவது.— அவர்களிஷ்டப்படி நடப்பதாம். பாண்டவர்க்குத் தூது சென்றதும், பார்த்தசார

தியாயிருக்கதும் இதனை வலியுறுத்தும். மேலும் எம்பெருமான் இவர்களுடைய இஷ்டபூர்த்தியைச் செய்யுமிடத்து ஸத்யஸங்கல் பனுகிய தன்னுடைய நிலைமையையழித்துச் செய்வதுமுண்டு. இத ஞல் இவனை ஆசிரிதபக்ஷபாதியென்று வழங்குவார்கள்.

கண்ணபிரான் துரியோதனனை நோக்கி, 'உங்களோடு போர்க் களத்தில் ஆயுதமெடுத்து அமர்புரியேன்' என்று வரமளித்துப் பின் பீஷ்மர் செய்த கடும்போர் கண்டு, 'பாண்டவர்கள் பட்டொழிவார் களே' என்று அவர்கட்காகப் பரிந்து ஆழியை யேந்திப் பீஷ்மரோ டெதிர்க்கச் சென்றதும் ஆசிரிதரிடத்திலுள்ள பக்ஷபாதமன்றோ!

மஹாபாரத யுத்தத்தில் பதிமூன்றும் போரன்று துரியோதன ஞியர் பத்மயூகம் வகுத்து, அர்ச்சுனன் சேயும் மஹாவீரனுமாகிய அபிமன்னுவைப் பலர்கூடி நீதிமுறையின்றிப் பொருதினர்கள். முடி வில் ஜயத்திரதன் அவனைக் கொன்றான். இஃதறிந்த அர்ச்சுனன் தன்னருமைப்புதல்வன் பிரிவுக்காற்றுது எரியிடை மூழ்க முயன்று நின்றபொழுது சிலபெரியார் தேற்றத்தேறி,

> சிந்துபதியாகியசெயத்திரனைத்தே
> ருந்தமரிஞனொயுருமேறெனவுடற்று
> வந்திபடும்வளவிஞவிகவரேனேல்
> வெந்தழலின்வீழ்வனிதுவேதமொழியென்றான்.

என்று என் புதல்வனைக்கொன்ற ஜயத்திரதனை நாளை மாலைப்பொழு திற்குள் பொருதுகொல்லேனுகில் எரியிடை மூழ்குவேனென்று சபதஞ் செய்தான.

இதனைக் கேட்ட தருமபுத்திரர் மனவருத்தமுற்றுக் கண்ண பிரானை நோக்கி, அர்ச்சுனன் கூறிய சபதப்படி அவன் ஜயத்திர தனை உயிர்கவராது எரியிடைப் புகுவனேல் நாங்கள் நால்வருமவ ஞேடு படுவோமன்றோ! என்றனர். அப்பொழுது கண்ணபிரான் தருமரை நோக்கி ஜயத்திரதனைக் காவல்புரிதற்கு இந்திரன். ஈசன் முதலிய தேவர்கள் வந்தாலும் மிக்க வலிமையுடைய நம்பியைபோ னுகிய அர்ச்சுனன் சபதங்கூறியபடி ஜயத்திரதனுடைய உயிரைக் கவராதொழியான்; இதற்கு நீவிர் வருந்தன்மின் என்று அர்ச்சுனனை யழைத்துக் கொண்டு கைலைக்குச் செல்லலுற்றான். அப்பொழுது

அர்ச்சுனன் புத்திரசோகத்தாலும் உணவுண்ணாததினாலும் மிகவும் களைப்புற்று வருந்தினான். அதுகண்ட கண்ணபிரான், 'இங்கிருக்கின்ற மாங்கனி முதலியவற்றை யுண்டு பசியாற்றுவாய்' என்றனன். 'சிவபெருமானைக்கண்டு அஸ்திரம் பெறவேண்டுமென்ற என்னுடைய விரதம் முற்றுப்பெறாதிருக்க, யான் எங்ஙனமுண்பேன்' என்றான். அப்படியானால் என் காலை அர்ச்சித்து உன் விரதத்தை முடித்துக் கொள்வாய் என்றனன். அவனும் அவ்வாறே செய்தான். *

பின்னர், கண்ணபிரான் பெரியதிருவடியை (கருடனை) நினைக்க, அவரும் அங்கு வந்து கண்ணபிரானைத் தோளிலும், அர்ச்சுனனைக் கரத்திலும் தாங்கிக்கொண்டு கைலை சென்றனர். அங்கு அர்ச்சுனன் அர்ச்சித்த புஷ்பம் சிவபெருமான் சிரசிலிருக்கக்கண்டு அப்பெருமான் அஸ்திரமளிக்கப் பெற்றனன். பின்பு கண்ணபிரான் அர்ச்சுனனை யழைத்துக்கொண்டு இருப்பிடம் வந்து சேர்ந்தனன்.

அதன் பிறகு துரியோதனாதியர் ஜயத்திரதனை நிலவறையிலடைத்துவிட்டுப் போர்செய்யத் தொடங்கினார்கள். அன்று அர்ச்சுனன் தன்னாற்றலால் பலவகைப் படைகளைக்கொன்று குவித்தான். ஜயத்திரதன்மாத்திரம் தன்கண்ணிற் படாதிருக்கக்கண்டு கவன்றான். மாலைப்பொழுதும் கிட்டிவிட்டது. யாது செய்வான்? இந்நிலையில்,

பாராழியவலமறப்பாண்டவர்தம்மிடர்தீரப்பார்த்தன்வாழப்
போராழியணைதுயிலும்பெருமிதமுமுடன்மறந்துபிறந்தமாயோன்
ஓராழியெழுபரித்தேருடையானைமாயையினாலொழிக்கத்தன்கைக்
கூராழிபணித்தலுமக்கணம்போலச்சிவந்தனவக்குடபாலெங்கும்.
அயத்திரதமிடப்பசும்பொனுவதுபோலருச்சுனனாறிஞனாக
நயத்திரதமொழிக்கீதைநவின்றபிரான்மயக்கறியார்நான்செய்வான்றன்
வயத்திரகமறைந்ததெனவலம்பரித்தாரவன்சேனைமன்னர்யாரும்
செயத்திரதன்தனைக்கொண்டுசெருமுனையில்விசயனெதிர்சென்று
[சேர்ந்தார்.

* "தீர்த்தனுலகளந்தசேவடிமேல்பூந்தாமம்
சேர்த்தியவையேசிவன்முடிமேல்தான்கண்டு
பார்த்தன்தெளிந்தொழிந்தபைந்துழாயான்பெருமை
பேர்த்துமொருவரால்பேசக்கிடந்ததே"

என்று ஆழ்வார் அருளிச் செய்ததும் இங்கறியத்தக்கது.

கண்ணபிரான் தன்னாழியால் ஓராழித்தேரானைமறைக்க அப்பொழுது மாலைப்பொழுது வந்துற்றதுபோலத்தோற்றியது. அதுகண்ட பகை மன்னரனைவரும் ஜயத்திரதனை நிலவறையினின்றுமீட்டுக்கொண்டு அர்ச்சுனன் முன்னிலையில் வந்து நின்றார்கள். அப்பொழுது கண்ண பிரான் அர்ச்சுனனை நோக்கி நண்ப! இஃதோர் நல்லதருணம் வாய்த்தது; "இந்த ஜயத்திரதன் தாதை விருத்தக்ஷத்திரனென்பான் † சமந்தபஞ்சகம் என்ற மடுவில் 'என்றனயன் தலையை எவன் நிலத்தில் விழும்படி செய்கிறானோ அவன்றலை துகளாகுக' என்று தர்ப்பணஞ்செய்கின்றான்; அவனுடைய கரத்தில் இந்த ஜயத்திரதன் சிரஞ்சென்று விழுமாறு வில்வாங்கிச்சரந்தொடுப்பாய்" என்றனன். அவனு மங்ஙனமே செய்ய ஜயத்திரதன் சிரம் தர்ப்பணஞ் செய்து கொண்டிருந்த அவன் தாதையின் கையில்விழ அவன் ஆறுதுயருற்று அதனைப் பூமியில்விட்டுப்புரண்டழுது அக்கணத்தே உயிர் துறந்தான்.

போர்க்களத்தினின்றார்கள் விரைவில் பொழுதிருண்டமைக்கு ஐயுற்றுக் கொண்டிருந்த சமயத்தில் மாமாயனாகிய கண்ணபிரான் திகிரியை வாங்கியவுடன் இன்னும் மாலைப்பொழுதாகச் சிறிது நேரமிருக்கக்கண்டு,

முடையெடுத்தகவனீதங்தொட்டுண்டுங்கட்டுண்டுமுதலுழைக்
குடையெடுத்துமழைதடுத்தும்வஞ்சனைக்கோர்கொள்கலமாங்கொடியபாவி
படையெடுத்துவினைசெய்யேனெனப்புகன்றமொழிதப்பிப்பகைத்தபோரி
னிடையெடுத்தநேமியினால்வெயின்மறைத்தானின்னமிவன்என்செய்யானே.

சிறுபிராயந்தொட்டு வஞ்சனைச்செயல் பலவற்றையுஞ்செய்து அதற்கோர் கொள்கலமாயுள்ள இந்தக் கண்ணன் படையெடுத்துப் போர் செய்யேனெனப் புகன்று, அதற்கு விரோதமாகச் சக்கரப்படையை யெடுத்துப் பகலோனை மறைத்தான். இந்தக் கொடும்பாவி இன்னமென்செய்யானோ என்று அரற்றினார்கள்.

ஒப்புயர்வற்றவனும், பரிசுத்தனும், பழியற்றவனுமாகிய எம்பெருமான் பழியுடைய மன்னவர்களும் அடாப்பழி கூறும்படி நின்

† பரசுராமன் துஷ்ட க்ஷத்திரியரைக்கொன்று அவரது குருதியைக் கொண்டு பிதுர் தர்ப்பணஞ் செய்வதற்காக அக்குருதியை ஐந்து தடாகங்களினிறைத்தான். அவ்விடம் சமந்தபஞ்சகம் எனப்பெயர் வழங்கிப் பின்னர் குருக்ஷேத்திரமென்று வழங்கலாயிற்று.

றது ஆசிரியரினிமித்தமேயாம், இதுபற்றியே பொய்கையாழ்வாரும்,

> மயக்கவலம்புரிவாய்வைத்தவனைத்
> தியக்குமெறிகதிரோன்றன்னை—முயக்கமருள்
> தோராழியான்மறைத்ததென்னீகிருமாலே
> போராழிக்கையால்பொருது.

என்றருளிச்செய்ததும் இங்கறியத்தக்கது.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(6-வது வால்யம் 316-ம் பக்கத்தொடர்ச்சி.)

6-வது அத்தியாயம்.

பிர்ம்ம கோபி—ஹரிவம்சம்.

விஷ்ணுபுராணத்திலிருந்து முந்திய அத்யாயத்தில் எக்கதை எடுத்துக்கூறினோமோ அக்கதையானது 5-வது அம்சம் 13-வது அத்யாயத்திலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வத்யாயத்தைத் தவிர விஷ்ணுபுராணத்தில் வேறிடத்தில் வ்ரஜகோபிகளின் கதை காணப்படவில்லை.

இவ்விதமாகவே ஹரிவம்சத்திலும் வ்ரஜகோபிகளின் கதை விஷ்ணுபர்வம் 11-வது அத்யாயத்தில் காணப்படுகிறது. ராஸ என்கிற சப்தமானது ஹரிவம்சத்தில் கூறப்படவில்லை. அதற்குப்பதிலாக ஹல்லீய: என்கிற சப்தம் இருக்கிறது. ஹல்லீய என்றால் ஒரு வ்ருத்தி விசேஷம். ஹரிவம்சத்தின் 11-வது அத்யாயத்தின் கதையை இங்குச் சுருக்கி வரைவோம்.

கிருஷ்ணன் ராத்திரியில் சந்திரன் விகாஸிப்பதைப் பார்த்து விளையாட்டில் ஆசைகொண்டான். ஓரிடத்தில் கொழுத்த எருது

களோடு பலசாலியான கிருஷ்ணன் சண்டை செய்தான். சிலவிடத்தில் பலத்தினுல் கொழுப்படைந்த கோபாலர்களோடு யுத்தம் செய்தான். இவ்விதமாக கருடன்போல் பசுக்களை வனமத்தியில் பிடித்தான். கிருஷ்ணபகவான் தான் பால்ய வயதிலிருந்தும் யுவதிகளான கோபிகளுடன் விளையாடிக்களித்தான். கோபிகள் கிருஷ்ணனுடைய அழகிய முகமண்டலத்தைக் கண்களாரக்கண்டு களிகூர்ந்தார்கள். சுந்தரமூர்த்தியான கிருஷ்ணன் பீதாம்பர மணிந்துகொண்டு அதிகமாகப் பிரகாசித்தான். தோள்வளை முதலிய ஆபரணங்களோடு மாலையணிந்த மார்பனும் விளங்கி அவ்விடைச்சேரிக்கு ஓர் ஆபரணமாய்ப் பிரகாசித்தான். அவ்வழகு நிறைந்த கிருஷ்ணனை நோக்கி கோபிகள் அப்பொழுது அவனைத் தாமோதரனென்று அழைத்தார்கள். விளையாட்டில் பிரியமுள்ள கோபிகள் தாய் தகப்பன் சகோதரன் முதலானுர் தடுப்பதையும் பாராட்டாமல் கிருஷ்ணனை அனுகினுர்கள். அவர்கள் யாவரும் வரிசை வரிசையாயிருந்துகொண்டு மனோஹரமாய் விளையாடினுர்கள். இடையிடையே கிருஷ்ண சரித்திரத்தைக் கானஞ் செய்தார்கள். கிருஷ்ணனுடன் நிருத்யத்தையும் கீதத்தையும் பார்வையையும் அநுகரணஞ்செய்து ஆனந்தமாக விளையாட ஆரம்பித்தார்கள். கிருஷ்ண பராயணைகளான அப்பெண்டிர்கள் பாவம் நிரம்பிய கானங்களைச்செய்துகொண்டு ஆனந்தமாக அவ்விடத்தில் அங்குமிங்கும் திரிய வாரம்பித்தார்கள்.

கிருஷ்ணன் ஹா! ஹா!! எனச்சப்தஞ்செய்து கானஞ்செய்தான். கிருஷ்ணபகவானுடைய திருமுகமண்டலத்திலிருந்து வெளிவந்த அந்த சப்தத்தையே அநுகரணஞ்செய்ய ஆரம்பித்தார்கள். விளையாட்டினுல் யுவதிகளின் கூந்தல்களின் கட்டவிழத் தொடங்கியது. ஸ்ரீ கிருஷ்ணன் இவ்விதமாக நல்ல நிலவுடன் கூடிய சரத்கால ராத்திரியில் கோபிகளுடன் கூடி ஆனந்தமடைந்தான்.

இக்கதையால் பாலனுகிய ஸ்ரீ கிருஷ்ணன் வேடிக்கையாக விளையாடினுனெனக் கொள்ளவேண்டுமே யொழிய வேறுவிதமாக நினைப்பதற்கு அவகாசமுமில்லை.

இந்த ஹல்லீசக் கிரீடாவர்ணனையானது விஷ்ணுபுராணத்தில் கூறியுள்ள கதையை அநுசரித்ததே. ஹரிவம்சத்தில் சுருக்கிச்

சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுபுராணத்தில் கோபிகள் சபலைகளான யூவிகைகளென்றும், ஹரிவம்சத்தில் கோபிகள் விலாஸிநிகளென்றும் கூறப்பட்டிருக்கின்றன. நாம் முந்திய அத்யாயத்தில் ராஸக்ரீடையைப்பற்றி எதெது கூறினோமோ அவையெல்லாம் ஹல்லீசக்கிரீடையிலும் பொருந்தும்.

ஏழாவது அத்யாயம்.

ப்ரஹ்மகோபி—பாகவதம்.

(வஸ்திரஹரணம்)

ஸ்ரீமத் பாகவதத்தில் கிருஷ்ண சம்பந்தமாக கோபிகளின் கதை ராஸந்ருத்யத்துடன் மாத்திரம் நிற்கவில்லை. கோபிகளுடன் கிருஷ்ணன் புரிந்த லீலைகளை பாகவதக்காரர் விசேஷமாகக் கூறியிருக்கிறார். சில வெளிப்படையாகக் கூறுவதற்கு இயலாதவைகளாயிருக்கின்றன. ஆனால் நடுவில் நடுவில் பவித்திரமான பக்தி தத்வங்களும் அடங்கியிருக்கின்றன. இதின் உதாரணத்திற்காக ஒரு கதையை இங்கு உபந்யஸிப்பாம்.

வஸ்திரஹரணமெனப் பிரஸித்தமான ஓர் உபந்யாஸம் இருக்கிறது வஸ்திரஹரண சம்பந்தமாக எவ்வித கதையும் மஹாபாரதத்திலாவது விஷ்ணுபுராணத்திலாவது ஹரிவம்சத்திலாவது காணக்கிடைக்கவில்லை. ஆனால் ஆராயுங்கால் இது பாகவதக்காரர் கற்பனையெனத் தோற்றுகிறது. ஸ்ரீ கிருஷ்ணனிடம் அநுராஹம் கொண்ட கோபிகள் கிருஷ்ணனை கணவனாக அடையவேண்டுமென்று காத்தியாயனீ வ்ருதம் செய்ய வாரம்பித்தார்கள். இந்த வ்ருதம் ஒருமாதகாலம் செய்யவேண்டும். அவர்கள் ஒருங்குகூடி அதிகாலையில் யமுனையில் ஸ்நானஞ் செய்தார்கள். இக்காலத்திலும் இத்தேசத்தில் அநேகவிடங்களில் மாதர்கள் ஸ்நானஞ்செய்யும்பொழுது ஓர் கெட்ட வழக்கமிருக்கிறது. அவர்கள் ஜலத்தில் மூழ்குமுன் ஆடையைக் களைந்துவைத்து ஆடையின்றியே ஜலத்தில் மூழ்குவார்கள். இது

மாதிரியே வ்ரஜாங்கனைகளும் செய்தார்கள். மாதக் கடைசியில் வ்ருதம் முடியுங்காலத்திலும் இவ்விதமே ஸ்நானஞ்செய்தார்கள். அவர்களுக்கு கர்மபலத்தை அளிப்பதற்காக அவர்கள் ஸ்நானஞ் செய்யுமிடத்திற்கு கிருஷ்ணன் சென்றான். ஆடைகளை யெடுத்து கிருஷ்ணன் கரையிலுள்ள கடம்பமரத்தில் ஏறிக்கொண்டான்.

கோபிகள் மிகவும் வெட்கமடைந்தார்கள். வஸ்திரமின்றிக் கரையிலேற முடியவில்லை. குளிர்ந்த காலை வேளையால் ஜலத்திலும் வெகுநேரம் இருக்க முடியவில்லை. '. கழுத்து வரையில் ஜலத்தில் மூழ்கிக்கொண்டு குளிரால் நடுங்க ஆரம்பித்தார்கள். கிருஷ்ணனை வஸ்திரம் கொடுக்கும்படி யாசித்தார்கள். கிருஷ்ணன் லகுவில் கொடுக்க விரும்பவில்லை. கோபிகளுக்கு கர்மபலனைக்கொடுக்க விரும்பினான். பிறகு யாது நிகழ்ந்ததோ? அதை ஸ்திரீகளும் குழந்தைகளும் அறியக்கூடிய தமிழ்ப்பாஷையில் வெளிப்படையாய்க்கூற நாம் உடன்படவில்லை. ஆதலால் அவர்களே பாகவதம் 10-வது ஸ்கந்தம் 22-வது அத்யாயத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

உள்ளடங்கிய பக்தி தத்வத்தை இங்கு கூறுவாம். பக்தியின் வழியாக ஈசுவரனை யடைவதற்கு அவரிடமே எல்லாவற்றையும் ஸமர்ப்பணமாகச் செய்வதே முக்ய சாதனம். பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் திருவாய்மலர்ந்தருளினான்.

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

கோபி ஜனங்கள் கிருஷ்ணனிடம் ஸர்வார்ப்பணத்தையும் செய்தார்கள் ஸ்திரீகள் எல்லாவற்றையும் விட்டுவிடுவார்கள். உயிரையும் விட்டுவிடுவார்கள், வெட்கத்தைமாத்திரம் விடமாட்டார்கள். லஜ்ஜை யென்பது ஸ்திரீகளுக்கு உத்தமமான ரத்னம். கோபிகள் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் லஜ்ஜையையும் அர்ப்பணஞ் செய்தார்கள்.

தொடரும்.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(16-வது வால்யம் 343-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, சிஷ்டர்களாகிய பெரியார்கள் அர்ச்சாராதனத்தைக் கையாளவில்லை யென்று குறை சொல்வதற்கு இடமில்லை. ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகஞ் செய்து கொள்ள யத்தனித்த காலத்தில் புரோகிதர் சென்ற பின்பு "ஸஹபத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" "ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று அர்ச்சாரூபியான பெரிய பெருமாளைச் சேவிக்கச்சென்றாரென்று ஸ்ரீராமாயணத்திற் சொல்லப்பட்டுளது. மேலும், தசரதர் புஷ்பம் தூப முதலிய ஆராதனத் திரவியங்களைக்கொண்டு தேவாலயங்கட்குச் செல்வீர்களென்று ஆஜ்ஞாபித்தாரென்றும், தேவாலயங்களில் உயர்ந்த ஸ்தானங்களில் கொடிமுதலியவற்றைக் கட்டினார்களென்றும், ஸ்ரீரங்கவிமானத்தை ஸ்ரீ விபீஷணாழ்வான் பெற்றுச் சென்றாரென்றும் சொல்லப்பட்டுள்ளன. பாரத பாகவதங்களிலும் அர்ச்சுனன் பலராமன் முதலானோர்கள் தீர்த்தயாத்திரை செய்யுங்காலத்தில் ஸ்ரீரங்கம் திருமலை ஸ்ரீஜகநாதம் முதலிய விடங்கட்குச் சென்றார்களென்பது மறியலாம்.

இன்னும் சில த்வீபாந்தரங்களில் அர்ச்சாராதனம் நடைபெறுகிறது. சில விடங்களிலில்லை. அது காரணமாக அர்ச்சாராதனம் செய்யத்தக்கதில்லை யென்று எவ்வகையாலும் சொல்ல முடியாது. இந்த அர்ச்சாராதன மில்லாத சில த்வீபாந்தரங்களில் சிலர் ப்ரம்மோபாஸனையுடையவர்களாக விருக்கிறார்கள். இவர்கள் சாஸ்திர மறிந்தவர்களன்றோ! இவர்கள் ஆராதனை செய்யாதற்குக் காரணமென்னை யெனின்? * கரணத்ரத்தையும் ஈசுவர விஷயத்தில் விநியோகிக்க வேண்டு மென்ற நினைவும், அவன் விஷயத்தில் நெஞ்சுருகுதலும், செய்ந்நன்றி மறவாமையும் முதலிய நற்குணங்கள் இவர்களிடத்திலில்லாத குறையினால் ஆராதனை செய்கிறார்களில்லை யென்றுகொள்ள வேண்டும்.

---

* காணத்ரயம்—மனம் வாக்கு காயம்.

மேலும், சிலருக்கு அர்ச்சாராதனம் வேண்டுவதில்லை என்று சொல்வதும் பொருந்தாது. * "ப்ரதிஷ்டாயாம் ஸார்வபௌமம் ஸத்மநா புவநத்ரயம், பூஜாதிநா ப்ரஹ்மலோகம் த்ரிபிர்மத்ஸாம்யதாமியாத், பக்தியோகம் லபதே ஏவம்ய: பூஜயேத்து மாம்" "ப்ரதிஷ்டாயாம் ஸார்வபௌமம் பத்மநாபுவநத்ரயம், பூஜாதிநாப் ரஹ்மலோகம் த்ரிபிர்மத்ஸமதாமியாத், பக்தியோகம் லபதே ஏவம்ய: பூஜயேத்து மாம்" என்று பகவான் தானே அருளிச் செய்திருப்பதால் இவ்வாராதனத்தை யாவரும் மேற்கொள்வதற்குரியவராவார்கள்.

இது நிற்க; "ப்ரதிமா ஸ்வல்பபுத்தீநாம்" "ப்ரதிமா ஸ்வப்ர புத்தாநாம்" என்ற பிரமாணத்தை ஆராயுமிடத்தில் அறிவற்றவர் கட்கே அர்ச்சாராதனம் உரியதாகுமேயன்றி மற்ருேர்கட்கு அது உரிமையாகாதென்று தோன்றுகிறதென்று சிலர் வாதிக்கிருர்கள். இவர்கள் வாதிப்பதை உண்மையாகக் கொள்ள வேண்டுமாகுல் அந்தச்சுலோகத்தில் "அப்ரபுத்தா நாமேவ" (அறிவற்றவர்கட்கு மாத்திரமே) என்றிருக்க வேண்டும்: அப்படியில்லாததினுலும், உத்தர வாக்யத்தில் "ஸர்வத்ரவிதிதாத்மநா" என்றிருப்பதாலும் இவர்கள் சொல்வது பொருந்தாது. மேலும் இவர்கள் எடுத்துக்காட்டிய பிரமாணத்தினுல் அக்ஞர்கட்கு அர்ச்சாபிம்பத்தில் மாத்திரம் ப்ரதிபத்தியுண்டாகுமென்பதும், ஆத்மதத்வத்தின் உண்மையறிந்த பெரியார்கட்கு அர்ச்சாபிம்பத்தோடு மற்றுமுள்ள எல்லாவற்றிலும் ப்ரதிபத்தியுண்டாகுமென்பதும் உண்மையாக விளங்குகின்றன. இஃதல்லாமலும் உலகத்தில் காணப்படுகின்றவையெல்லாம் பகவத் ஸம்பந்தமுடைய பொருள்களாதலால் அப்பொருள்களெல்லாவற்றிலும் ஈசுவர விஷய ப்ரதிபத்தி யுடையார் உத்தமாதிகாரியென்றும், அர்ச்சாபிம்பத்தில் மாத்திரம் ப்ரதிபத்தியுடையார் மந்தாதிகாரியென்றும் வெளியாகின்றன. இது பற்றியே "அர்ச்சாயாமேவ ஹரயே" "அர்ச்சயாமேவ ஹரயே" என்று மந்தாதிகாரிக்கு அர்ச்சாபிம்பத்தில்மாத்திரமேபகவானென்ற ப்ரதிபத்தியுண்டாகிறதென்று சொல்லப்பட்டது

இதுநிற்க; வேதத்தை ஒப்புக்கொள்ளாமல் ஈசுவரன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொள்கிறவர்களுக்கும் அர்ச்சாராதனம் அவசியமென்று முன்னமே சொல்லப்பட்டது. இனி, இதுவரையும் கூறியவாற்றுல் ஈசுவரனில்லையென்று சொல்லுகிற நாஸ்திகனைத் தவிர மற்றை யாவருக்கும் அர்ச்சாராதனம் அவசியமென்று நிருபிக்கலாயிற்றென்பது தெளிவாயிற்று.

முற்றுப்பெற்றது.

---

* இதன் பொருளாவது—அர்ச்சாபிம்பப் பிரதிஷ்டை செய்வதால் சக்ரவர்த்திபதவியும், ஆலய நிர்மாணத்தால் மூன்று லோகாதி பத்யமும், ஆராதனத்தால் பிர்ம்மலோகப் பிராப்தியும், இம்மூன்றையுஞ் செய்தால் என்னேடு சாம்யத்தையும், பக்தி யோகத்தையும் அடைகிருனென்பதாம்.